

சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தெற்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள தி.மு.க. நிர்வாகிகளை பகுதிவாரியாக சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் சுபாஷ், செயற்குழு உறுப்பினர் சி.ராஜேந்திரன், மாநகரச் செயலாளர் ரகுபதி, துணை செயலாளர் கணேஷன், எம்.எம்.ஷெரீப், எஸ்.ஆர்.அன்வர், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்

## கல்லூரி மாணவன் கொடூரமான கொலை! வீடு புகுந்து பெண் அடித்துக் கொலை!

# த.வெ.க. ஆட்சியில் கொலை நகரமாகும் கோவை!

## பொதுமக்கள் அச்சம்!

*கோவை , ஆக. 15 -*

*பாப்பநாயக்கன் பாளையம் கருப்புக்கால் தோட்டத்தை சேர்ந்தவர் சாந்தி (58). இவரது கணவர் கிருஷ்ணன் இறந்து விட்டார். அவர்களுக்கு ராஜா (35) என்கிற மகனும், அமுதா (30) என்கிற மகளும் உள்ளனர். மகள் அமுதா திரு மணமாகி பாலக்காட்டில் வசித்து வருகிறார்.*

*சாந்தி மகன் ராஜாவுடன் தங்கியிருந்து அதே பகுதியை சேர்ந்த டாக்டர் ஒருவர் வீட்டில் சமையல் வேலை செய்து வந்தார். ராஜா, சொந்தமாக வெல்டிங் ஒர்க் ஷாப் நடத்தி வருகிறார். இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை ராஜா வழக்கம்போல் வேலைக்கு சென்று விட்டார். அதேபோல் சாந்தியும் வேலைக்கு சென்றதாக தெரிகிறது.*

*மதியம் வீடு திரும்பிய சாந்தி இரவு வரை வெளியே வரவில்லை. அக்கம் பக்கத்தினர் அவரது வீட்டிற்கு சென்று பார்த்த போது அவர் ரத்த வெள்ளத்தில் சடலமாக கிடந்துள்ளார்.*

*இது குறித்து தகவல் அறிந்த ரேஸ் கோர்ஸ் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு செய்ததில் சாந்தியின் தலையில் 4 இடங்களில் தாக்கிய பலத்த காயங்கள் இருந்தது தெரிய வந்தது. இதை வைத்து சாந்தியை யாரோ மர்மநபர் அடித்து கொன்றுள்ளார் என உறுதி செய்தனர்.*

*இது குறித்து போலீசார் வழக்கு பதிந்து 3 தனிப்படை அமைத்து கொலைக்கான காரணம் என்ன? வீட்டிற்கு யாராவது வந்தார்களா? என்ற கோணத்தில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.*

*கோவையில் கடந்த 3ம் தேதி பீளமேடு போலீஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் சென்னையை சேர்ந்த நவீன் (25) என்பவர் கொல்லப்பட்டார். 6ம் தேதி கிணத்துக்கடவில் உள்ள கல்லூரியில் கஞ்சா விற்பதாக புகார் கொடுத்த மாணவன் அஸ்வினை (22) சீனியர் மாணவர்கள் கடத்தி கத்தியால் குத்தியும், இரும்பு ராடால் அடித்தும் கொலை செய்தனர். 10ம் தேதி செட்டிப்பாளையம் போலீஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமுதன் (19) என்பவரும் கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சாந்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கோவை மாவட்டத்தில் 11 நாட்களில் 4 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பொது மக்களிடையே பெரும்*

*அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

## கோவை பொறியியல் கல்லூரி மாணவர் அடித்துக்கொலை – த.வெ.க. அரசு மீது நம்பிக்கை இழப்பு!

# உதயநிதி சார்! நீங்கதான் நீதி வாங்கித் தரணும்!

## உயிரிழந்த மாணவனின் பெற்றோர் கண்ணீர் மல்க வேண்டுகோள்!

கள்ளக்குறிச்சி, ஆக. 15 –

கோவை தனியார் பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் விற்றது தொடர்பான தகவல்களை தந்ததால் அடித்து கொலை செய்யப்பட்ட அமுதனின் வீட்டுக்கு, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் உதயசூரியன் நிர்வாகி களுடன் வீடு தேடி சென்று மகனை இழந்து வாடும் பெற்றோருக்கு ஆறுதல் கூறி திமுக சார்பில் ரூ.2லட்சம் நிவாரணத் தொகையையும் வழங்கியதுடன், இரண்டாவது மகனின் முழு கல்வி செலவையும் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து குடும்ப த்திற்கு வேண்டிய உதவிகளையும் தி.மு.க. செய்யும் என்றும் உறுதி கூறினார்.

அப்பொழுது அவரிடம் பெற்றோர்கள் தனது மகனின் இறப்புக்கு தக்க நீதி கிடைக்க வேண்டும் அதற்கு உதயநிதி சார் தான் குரல் கொடுக்க வேண்டும், உதவிட வேண்டும், நீதி வாங்கி தர அவரால் மட்டும் தான் அது முடியும் என்று கண்ணீருடன் கதறி அழுது வேண்டுகோள் வைத்துள்ளனர்.

கோவை இந்துஸ்தான் பொறியியல் கல்லூரி விடுதிக்குள் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக கல்லூரி முதல்வர், துறைத்தலைவர், உடற்கல்வி ஆசிரியர் உள்ளிட்டோரிடம் தகவல் அளித்ததாகக் கூறப்படும் மூன்றாம் ஆண்டு மாணவர் அமுதன், 20க்கும் மேற்பட்ட சக மாணவர்கள் மற்றும் போதைப் பொருள் தொடர்புடைய இளைஞர்களால் கொடூரமாக கொல்லப்பட்டதாக அவரது தந்தை ஊடகங்களிடம் கதறியிருப்பது அதிர்ச்சியையும், ஆழ்ந்த வேதனையையும் ஏற்படுத்துகிறது.

இது வெறும் ஒரு மாணவனின் மரணம் அல்ல, தவறைத் தட்டிக் கேட்ட ஒரு மாணவனுக்கு கிடைத்த தண்டனையா இந்த மரணம்?

கல்லூரி நிர்வாகத்திடம் மாணவன் அமுதன் அளித்த தகவல்கள் உண்மையில் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டனவா? "உனக்கும் எனக்கும் தான் தெரியும். வெளியே யாருக்கும் தெரியாது. தைரியமாகப் போ என்று கூறிவிட்டு, அந்த மாணவனிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கசியவிடப்பட்டிருந்தால், அந்தத் தகவல் கசிவுக்கு பொறுப்பானவர்கள் மீது கொலைக் குற்றத்தைவிடக் குறையாத அளவுக்கு கடுமையான விசாரணை நடத்தப்பட வேண்டாமா?

ஒரு மாணவன் உண்மையைச் சொன்னதற்காகவே உயிரிழக்க வேண்டிய நிலை என்றால், நாளை எந்த மாணவன் போதைப் பொருள் விற்பனை குறித்து புகார் கொடுக்கத் துணிவான்?

மாணவர்கள் கொடுக்கும் புகார்கள் ரகசியமாகக் காக்கப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இருக்க வேண்டும். இல்லையெனில், கல்லூரிகளுக்குள் நடக்கும் போதைப் பொருள் விற்பனை, ராகிங், பாலியல் அத்துமீறல், வன்முறை என எந்தக் குற்றத்தையும் மாணவர்கள் வெளியில் சொல்ல அஞ்சுவார்கள்.

எனவே, இந்தச் சம்பவத்தில் கொலை செய்தவர்கள் மட்டுமல்ல தகவல் எவ்வாறு கசிந்தது? யார் கசியவிட்டார்கள்? யாருடைய அலட்சியத்தால் ஒரு மாணவனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது? என்பதும் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக மாணவன் அமுதனிடம் விசாரணை நடத்தியதாகக் கூறப்படும் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் ஆசிரியர்களிடம் காவல் துறை தீவிர விசாரணை நடத்த வேண்டும்.

கல்லூரி வளாகத்துக்குள் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் எப்படி நுழைந்தன?

யார் விற்றார்கள்?

யார் வாங்கினார்கள்?

யார் பாதுகாத்தார்கள்?

யார் தகவலை கசிய விட்டார்கள்?

யார் நடவடிக்கை எடுக்காமல் இருந்தார்கள்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்க வேண்டும்.

உண்மையை வெளிக்கொண்டு வராமல், சம்பவத்தை வெறும் "கோஷ்டி மோதல் என்று சட்டமன்றத்தில் ஒரு அமைச்சர் சொல்வது பொறுப்பற்ற அலட்சியம், ஒரு மாணவன் கொல்லப்பட்டிருக்கிறான்.

அவனது குடும்பம் கதறுகிறது.

கல்லூரி வளாகத்தில் போதைப் பொருள் குறித்த கடுமையான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஆனால் பதில் "கோஷ்டி மோதல்!

இது தான் தவெக அரசின் போதை ஒழிப்பு லட்சணமா?

இது தான் தவெக அரசு மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் லட்சணமா?

மாணவர்களின் உயிரைவிட சோபா மாடல் முதல்வர் விஜய்க்கு அரசியலும், விளம்பரமும், சினிமா சந்திப்புகளும் முக்கியமா?

சினிமா நடிகர்களை சந்திப்பதிலும், புகைப்படம் எடுப்பதிலும் காட்டப்படும் ஆர்வத்தில் ஒரு பகுதியாவது, தமிழ்நாட்டின் கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பைப் பற்றி சிந்திப்பதில் காட்டப்படுமா?

அமுதனின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும்.

உண்மையைச் சொன்ன மாணவன் கொல்லப்பட்டான் என்ற குற்றச்சாட்டு உண்மையானால், அந்த உண்மையை வெளிக்கொண்டு வந்து, குற்றத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய ஒவ்வொருவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

அமுதனுக்கான நீதி என்பது ஒரு மாணவனுக்கான நீதி மட்டுமல்ல நாளை உண்மையைப் பேசப் போகும் ஒவ்வொரு மாணவனுக்குமான பாதுகாப்பு.

இந்த நிகழ்வின் போது வடக்கு மாவட்ட செயலாளர் உதயசூரியன், பேரூராட்சி தலைவர் பன்னீர்செல்வம், ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன், மாநில மகளிர் அணி துணை செயலாளர் அங்கையற்கண்ணி, நகர செயலாளர் ஜெயவேல் மற்றும் அனைத்து நிர்வாகி கள் தொண்டர்கள் உடன் இருந்தனர்.

## தமிழ்நாடு மாணவர்களின்

# கற்றல் தரக் குறியீட்டை உயர்த்த ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் – எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 15 -*

*திராவிட முன்னேற்றக் கழக, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 12 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் தமிழ்நாடு மாணவர்களின் கற்றல் தரக் குறியீட்டை உயர்த்திட ஒன்றிய அரசின் பள்ளிக் கல்வித் துறை ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும் ஆரம்ப நிலை கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தவும், மனித வள மேம்பாடு குறித்தும் ஏதேனும் செய்ய இயலுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் போட்டித் தேர்வுகளில் கற்றல் தரம் குறைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் கல்வித் துறை இணைய மைச்சர் ஜெந்த் சௌத்ரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.*

*அதற்கு ஒன்றிய அரசின் கல்வித் துறை இணைய மைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:*

*பல்வேறு மாநிலங்களின் பள்ளிக் கல்வித் தரத்தை ஒப்பிடுவதற்கென ஒன்றிய அரசு 70 காரணிகள் அடங்கிய கற்றல் தரக் குறியீட்டு அறிக்கை ஒன்றை உருவாக்கியுள்ளது என்றும் பள்ளிக் கல்வித் துறை இணைய செயலி மூலம் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய முயற்சிகளை எடுத்து வருகின்றன என்றும், தமிழக மாணவர்களின் கற்றல் குறியீட்டுத் தரம் கடந்த 2025-26ஆம் கல்வியாண்டில் 628 புள்ளிகளாக உயர்ந்துள்ளது என்றும், ஆசிரியர்களுக்கான பயிற்சி புத்தகங்களின் தரம், மொழி அறிவு, கணித கற்றல் பல்வேறு மாநிலங்களில் பின்பற்றப்படும் சிறந்த அணுகு முறைகள் ஆகியன குறித்தும் இந்த அறிக்கையில் விவரமாக தரப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.*

*மேலும் ஒன்றிய அரசின் திட்டங்களான சமக்ரா, சிக்ஷா, கஸ்தூரிபாய் காந்தி குழந்தைகள் பள்ளிகள், நேதாஜி சுபாஷ் சந்திரா பள்ளிகள் ஆகியவற்றின் மூலம் மாநிலங்களுக்கு தேவையான நிதி உதவிகளை ஒன்றிய அரசு தந்து வருகிறது என்றும், உண்டு உறைவிடப் பள்ளிகளை உருவாக்குதல், தொழிற் கல்வியில் பயிற்சி அளித்தல், கணிணி மயமாக்குவதற்கான நிதியுதவி அளித்தல், இலவச புத்தகங்கள் வழங்குதல் இலவச சீருடை அளித்தல் போன்றவற்றில் மாநில அரசுகளுக்கு, ஒன்றிய அரசு நிதியுதவி அளித்து வருகிறது என்றும், தேசிய கல்விக் கொள்கை 2020ன் படி எழுத்தறிவு, எண்களின் அறிவு, திறன் மேம்பாட்டு, தொழிற் கல்வி வேலை வாய்ப்பினை உருவாக்கும் பயிற்சிகள் என்று அனைத்து துறைகளிலும் மாணவர்களை தயார்படுத்த ஒன்றிய அரசு அனைத்து உதவிகளையும் நல்கி வருகிறது.*



*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதில் அளித்தார்.*

## அம்பத்தூர் – புதூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள

# தனியார் ரங்கராட்டினத்தினால் போக்குவரத்து பாதிப்பு!

## விபத்துகள் ஏற்படும் அபாயம்!



*சென்னை, ஆக.15 -*

*அம்பத்தூர் தாங்கல் ஏரிப் பூங்காவுக்கு கிழக்கில் உள்ள புதூர் சாலையில் சாலையை ஆக்கிரமித்து தனியார் ரங்கராட்டினம் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.*

*இதனால் விபத்துகள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.*

*அச்சாலையின் அகலத்தில் பாதிக்கு மேற்பட்ட இடத்தில் ரங்க ராட்டினத்தின் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.*

*இங்கு விபத்துகள் ஏற்படுவதற்கு முன்பு, அரசு உரிய நடவடிக்கை எடுத்து சாலையில் நடுவில் அமைக்கப்பட்டுள்ள ரங்கராட்டினத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று பொது மக்களும் வாகன ஓட்டிகளும் கேட்டுக் கொண்டுள்ளனர்.*

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

# எம்.எம்.அப்துல்லாவின் தாயார் ஹாஜியா மு.நபீஸா பீவீ மறைவு!

புதுக்கோட்டை, ஆக. 15 -

தி.மு.க. அயலக அணிச் செயலாளர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா அவர்களின் தாயார் ஹாஜியா மு.நபீஸா பீவீ அவர்கள் நேற்று முன்தினம் (13.08.2026 வியாழக்கிழமை) மதியம் 12 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (14.08.2026 வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில், புதுக்கோட்டை, ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, செம்பூதியில் உள்ள மையவாடியில் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு மதியம் 1 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

### ஆகஸ்ட் 15 (1980)



**தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.**

**அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.**

**உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.**

**1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.**

**காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**


**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கேஎஸ்எம். மணிமுத்து

### ஆகஸ்ட் 15 (2024)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**சிவகங்கை நகர்மன்ற துணைத் தலைவராகவும், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்காக குரல் கொடுத்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**